முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (22.05.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ரவிகுமார் திங்ரா சந்தித்துப் பேசினார். உடன் தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு உள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (22.5.2023) தலைமைச் செயலகத்தில், பதிவுத்துறையில் சந்தை வழிகாட்டி மதிப்பு சீரமைப்புக் குழுவின் முதல் அடுக்கு உயர்மட்டக் குழுவின் தலைவர் முனைவர். தேவ ஜோதி ஜெகராஜன் அவர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.05.2023) சென்னை தலைமைச்செயலகத்தில், கோவை மாவட்டத்தைச் சேர்ந்த மிதிவண்டி வீராங்கனை (Cycling) செல்வி ஷா. தபித்தா பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பங்கேற்று வெற்றிபெறுவதற்கு ஏதுவாக போட்டிகளுக்கென்று பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட மிதிவண்டி வழங்கினால் பல்வேறு சாதனைகளை படைத்து நமது மாநிலத்திற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்க்க முடியும் என கேட்டுக்கொண்டபடி தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து, ரூபாய் 13.99 லட்சம் மதிப்பீட்டிலான Argon 18 PRO (Complete bike) Competition Wheel Set, Mavic Front Five Spoke Wheel Set and Mavic Rear Disc Wheel set மிதிவண்டியை வழங்கினார்.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு

தனது சொந்த நிதியிலிருந்து ரூ.5 இலட்சத்துக்கான காசோலை!

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, மே 23 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.05.2023) தலைமைச் செயலகத்தில், "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை"க்கு தனது சொந்த நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாய்க்கான காசோலையினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில்

பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு தமிழ்நாட்டை விளையாட்டின் தலைநகராக மாற்ற வேண்டும் என்ற லட்சியத்தோடு, மாநிலத்தில் அதிநவீன விளையாட்டு உட்கட்டமைப்பு மற்றும் விளையாட்டு வசதிகளை ஏற்படுத்தவும், விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் விளையாட்டு சூழலை உருவாக்கிடவும், அரசிற்கும், பங்குதாரர்களுக்கும் இடையில் தடையற்ற ஒருங்கிணைப்பை அடைவதற்கும், பெருநிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட நன்கொடையாளர்களிடமிருந்து பெறக்கூடிய நன்மைகளைப் பயன்படுத்துவதற்கும், "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை" (Tamil Nadu Champions Foundation) என்ற அறக்கட்டளை உருவாக்கப்பட்டு முதலமைச்சர் அவர்களால் 8.5.2023 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் உருவாக்கம், உறுப்பினர்கள் மற்றும் இயக்குநர் குழுவின் செயல்பாடுகள் ஆகியவை தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த அறக்கட்டளை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களை துணைத் தலைவராகவும் கொண்ட ஏழு பேர் அடங்கிய நிர்வாகக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாக நடைமுறைகளை சிறப்பாக செயல்படுத்துவதற்கு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு தனது சொந்த நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாய்க்கான காசோலையினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலாளர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மிதிவண்டி வீராங்கனை

செல்வி ஷா.தபித்தாவுக்கு நவீன மிதிவண்டி!

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, மே 23 -

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.05.2023) சென்னை தலைமைச்செயலகத்தில், கோவை மாவட்டத்தைச் சேர்ந்த மிதிவண்டி வீராங்கனை (Cycling) செல்வி ஷா.தபித்தாவுக்கு போட்டிகளுக்கென்று பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட ரூபாய் 13.99 லட்சம் மதிப்பிலான மிதிவண்டியை வழங்கினார்.

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 10ஆம் வகுப்பு பயின்று வரும் செல்வி ஷா.தபித்தா சைக்கிளிங் வீராங்கனை ஆவார். இவர் 2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ம் தேதி முதல் 15ம் தேதி வரை அசாம் மாநிலத்தில் கவுகாத்தியில் நடைபெற்ற 14 வயதிற்குட்பட்டோருக்கான தேசிய அளவிலான சைக்கிளிங் போட்டியில் (Track) வெள்ளிப்பதக்கம் பெற்றுள்ளார். ஜனவரி 2023ம் வருடம் மகாராஷ்ட்ரா மாநிலம், நாசிக்கில் 07.01.2023 முதல் 10.01.2023 வரை நடைபெற்ற 27வது தேசிய அளவிலான மிக இளையோர் (மகளிர்) சைக்கிளிங் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்றுள்ளார்.

தேசிய அளவில் நடைபெற்ற சைக்கிளிங் போட்டியில் வெற்றி பெற்று, தற்பொழுது National Centre of Excellence (NCOE) மூலமாக தேர்வு செய்யப்பட்டு பயிற்சி மேற்கொண்டு வரும், செல்வி ஷா.தபித்தா பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பங்கேற்று வெற்றிபெறுவதற்கு ஏதுவாக போட்டிகளுக்கென்று பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட மிதிவண்டி வழங்கினால் பல்வேறு சாதனைகளை படைத்து நமது மாநிலத்திற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்க்க முடியும் என இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை விடுத்தார்.

அவரது கோரிக்கையினை கனிவுடன் பரிசீலித்த இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மிதிவண்டி வழங்க நடவடிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இதனை தொடர்ந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் வீராங்கனை செல்வி ஷா.தபித்தா கேட்டுக் கொண்டபடி தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து ரூபாய் 13.99 லட்சம் மதிப்பீட்டிலான Argon 18 PRO (Complete bike) - Competition Wheel Set, Mavic Front Five Spoke Wheel Set and Mavic Rear Disc Wheel set மிதிவண்டியை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலாளர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

உள்ளாட்சிகளில் கணினி பயன்பாடு

தமிழ்நாட்டில் கிராமங்கள் கழக அரசால் முன்னேற்றத்தை நோக்கி செல்கின்றன!

'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, மே 23 -

தமிழ்நாட்டில் உள்ளாட்சிகளிலும் கணினி பயன்பாடு செயல்படுத்தப்பட்டுள்ளது. இது தமிழ்நாட்டின் கிராமங்களை முன்னோக்கி எடுத்துச் செல்லும் முயற்சியாக கழக அரசு செயல்படுகிறது என பாராட்டு தெரிவித்து "உள்ளாட்சியில் கணினி மயம்" என்ற தலைப்பில் 'தினகரன்' நாளேடு தலையங்கம் எழுதி தனது வாழ்த்துகளை தெரிவித்துள்ளது.

தினகரன்
உள்ளாட்சியில் கணினி மயம்

கணினிமயமாகி வரும் இந்த உலகில் உதடுகள் ஊமையாகி போவதும், விரல்கள் பேசுவதும் வாடிக்கையாகி வருகிறது. காகித பண பரிமாற்றங்கள் குறைந்து, அனைத்தும் ஆன்லைன் என்றாகிவிட்டது. பணம் கொடுக்கல் வாங்கல் உள்ளிட்ட பல்வேறு பண பரிமாற்றங்கள் தற்போது ஆன்லைன் மூலமே நடந்து வருகிறது. தமிழ்நாட்டில் பல்வேறு துறைகள் கணினிமயமாக்கப்பட்டு விட்டன. இதன் அடுத்தகட்ட முயற்சியாக இப்போது ஊராட்சிகளிலும் கணினிமயம் புகுந்துள்ளது.

தமிழ்நாடு கிராம ஊராட்சிகளில் வரிகள் மற்றும் கட்டணங்கள் இனிமேல் ரொக்கமாக பெறப்படாது. அவற்றை ஆன்லைன் மூலம் பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்படும் என சட்டசபையில் ஏற்கனவே ஊரக வளர்ச்சித்துறை சார்பில் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி இன்று முதல் தமிழகத்தில் கிராம ஊராட்சிகளில் முழுமையான இணையதள பயன்பாடு அமலுக்கு வருகிறது. இன்று முதல் கிராம மக்கள் வீட்டுவரி, சொத்து வரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி மற்றும் இதர வரியில்லா வருவாய் இனங்களை இணையவழியே செலுத்திட கேட்டு கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் ஊரக பகுதிகளில் பொதுமக்கள் மனை பிரிவுகளுக்காக அனுமதி, கட்டிட அனுமதி, தொழிற்சாலைகள் தொடங்க அனுமதி, தொழில் நடத்த தேவையான அனுமதிகளை பெற ஒற்றை சாளர முறையில் இணையதளம் மூலம் விண்ணப்பித்து பெறலாம். இதற்காக கிராம இணையதளங்களில் 1.38 கோடி தரவுகள் உள்ளீடு செய்யப்பட்டுள்ளன. பொதுமக்கள் இனி மேல் ரொக்க தொகையை வரி செலுத்த கொண்டு செல்ல வேண்டியதில்லை. ஆன்லைன் மூலம் தொகையை செலுத்தி அதற்குரிய ரசீதுகளை பெற்று கொள்ளலாம்.

கிராம ஊராட்சிகளில் உருவாக்கப்பட்டுள்ள கணினி மயமாக்கல் மூலம் இனி மேல் பொதுமக்கள் தங்களுக்கான சேவைகளை எளிதில் பெற முடியும். அனைத்திலும் கணினி பயன்பாடு முறை கேடுகளை தவிர்க்கவும் உதவும். தமிழ்நாட்டில் 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊராட்சிகள் உள்ள நிலையில், இனிமேல் அனைத்திலும் கணினி பயன் பாடு அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

தமிழக அரசு ஆன்லைன் முறையை கொண்டு வர கடந்த சில மாதங்களாகவே உரிய முன்னேற்பாடுகளை மேற்கொண்டது. அதன்பேரில் அனைத்து கிராம ஊராட்சி செயலர்களுக்கும் கணினி பயன்பாடு, பொது நிதி மேலாண்மை கணக்கு, மின்னணு பரிமாற்ற முறைகள் குறித்து உரிய பயிற்சிகள் அளிக்கப்பட்டன. கிராமங்களில் உள்ள ஊராட்சி செயலர்கள் தற்போது கணினி குறித்த அறிவாற்றல் மிக்கவர்களாகவும் உள்ளனர். மேலும் அனைத்து ஊராட்சிகளிலும் கதவு எண், வீட்டின் உரிமையாளர் பெயர் உள்ளிட்ட விபரங்கள் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

அரசு முன்கூட்டியே திட்டமிட்டு பல்வேறு பணிகளை மேற்கொண்டிருப்பதால், கிராமங்களில் ஆன்லைன் மூலம் வரிவசூல் எளிதாக நடக்க வாய்ப்புகள் உள்ளன. வரிவசூல் செய்யும் ஊராட்சி மன்ற ஊழியர்களுக்கு இனி மேல் பணிச்சுமை குறையும். கிராம மக்களும் தங்கள் கைபேசியில் அதற்குரிய செயலியை பதிவிறக்கம் செய்து கொண்டால் வீட்டு வரி உள்ளிட்ட வரிகளை எளிதில் செலுத்தி கொள்ளலாம். கிராமங்கள் முன்னேற்றத்தை நோக்கி நகர்வதற்கான நல்லதொரு படிக்கட்டுகளை தமிழ்நாடு அரசு தற்போது உருவாக்கி தந்துள்ளது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2000 ரூபாய் நோட்டுக்களை

கூட்டுறவு வங்கிகளில் மாற்றுவதில் தவறு நடைபெற்றால் கடும் நடவடிக்கை!

அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் எச்சரிக்கை!

சிவகங்கை, மே 23 -

தமிழக கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் சிவகங்கையில் செய்தியாளர்களிடம் கூறியதாவது.

ஒன்றிய அரசு 2000 ரூபாய் நோட்டுகளை செப்டம்பர் மாதம் வரை வங்கியில் திருப்பி செலுத்தலாம் என்று அறிவிப்பு வெளியிட்டுள் ளது. இது கூட்டுறவு வங்கிகளுக்கும் அரசு விதிகளுக்கு உட்பட்டு

பொருந்தும். பொருட்கள் வாங்குவோர் ரேஷன் கடைகளில் ரூபாய் 2000 கொடுத்து பொருட்களை வாங்கிக் கொள்ளலாம்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் பண பரிவர்த்தனை மாற்றத்தின் போது பல்வேறு முறைகேடுகள் கூட்டுறவு வங்கியில் நடைபெற்றதாக தி.மு.க. ஆதாரப்பூர் வமான புகார்களை கூறியது. அத்தகைய புகார்கள் எதுவும் தற்போதைய தி.மு.க. ஆட்சியில்நடைபெறாது. அவ்வாறு கூட்டுறவு வங்கிகளில் தவறுகள் நடை பெற்றதாக புகார் வந்தால் அதுகுறித்து உரிய விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கப்படுகிறது.

இவ்வாறு அமைச்சர் பெரியகருப்பன் கூறினார்.

பேட்டியின் போது நகர்மன்ற தலைவர் துரை ஆனந்த், திருப்புவனம் பேரூராட்சி மன்றத்தலைவர் த.சேங்கை மாறன், ஊராட்சி மன்றத் தலைவர் கே.எஸ்.எம்.மணிமுத்து ஆகியோர் இருந்தார்கள்.

பெரம்பலூர் மாவட்ட இளைஞர் அணி சார்பில் தெருமுனைக் கூட்டங்கள்!

பெரம்பலூர், மே 23 -

பெரம்பலூர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் து. ஹரிபாஸ்கர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

கீழ்க்கண்ட இந்த கூட்டங்களில் தலைமை கழக பேச்சாளர்கள் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகின்றனர். இந்த கூட்டத்தில் மாவட்ட கழகச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் மற்றும் மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துனை அமைப்பாளர்கள்,உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

23.05.23பெரம்பலூர் ஒன்றியம். அம்மாபாளையம். - சேலம் சுஜாதா.

23.05.23 வேப்பூர் வடக்கு ஒன்றியம். நமையூர். - கரூர் முரளி.

23.05.23 ஆலத்தூர் கிழக்கு ஒன்றியம். கொட்டரை. - சிங்கை பிரபாகரன்.

23.05.23 பெரம்பலூர் நகரம். - அரனாரை மற்றும் பழைய பேருந்து நிலையம்.- போடி.காமராஜ். 25.05.23 வேப்பூர் தெற்கு ஒன்றியம். கல்லை. - சேலம் கோவிந்தன்.

25.05.23 நூத்தப்பூர்.வேப்பந்தட்டை மேற்குஒன்றியம். - எழுமூர் கோபி.

இந்த கூட்டங்களை சிறப்பாக நடத்திட வேண்டும் என்று மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் து. ஹரிபாஸ்கர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

GREATER CHENNAI CORPORATION
SPECIAL PROJECT DEPARTMENT
S.P.D.C.No.A1/0666-5/2023
e-TENDER NOTICE
e-Tenders are invited for the following works in Single Cover System as per details furnished below.

Sl. No.	NIRBHAYA FUND - Development of Sports Training Grounds in GCC Schools
1	S.P.D.C.No.A1/0666-5/2023 - Package V - in Dn-128, Dn-133 & Dn-142, Zone-10, approximate value of work Rs.106.87 lakhs (Including GST) E.M.D. amount Rs.1,07,000/-
2	S.P.D.C.No.A1/0666-6/2023 - Package VI -in Dn-175 & Dn-182, Zone-13, approximate value of work Rs.194.22 lakhs (Including GST) E.M.D. amount Rs.1,95,000/-
Tender last date and time of submission	: upto 08.06.2023, 3.00 pm
Bid document will be available in website	: https://tntenders.gov.in upto 08.06.2023, 3.00 pm
Tender opening date and time	: 09.06.2023 at 3.00 p.m.

DIPR / 2688 / Tender / 2023 சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம் Superintending Engineer /S.P

2022-2023ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற 11 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் சென்னை பள்ளிகளில் சிறப்பிடம் பெற்ற 10 மாணவ, மாணவியர்களை மேயர் திருமதி ஆர்.பிரியா நேற்று (22.05.2023) ரிப்பன் கட்டட வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பாராட்டி பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மு.மகேஷ் குமார், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், நிலைக்குழுத் தலைவர் (கல்வி) த.விஸ்வநாதன் , துணை ஆணையாளர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, கல்வி அலுவலர், உதவிக் கல்வி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி கிழக்கு பகுதி இளைஞர் அணி சார்பில் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக் கூட்டம் பகுதி கழக செயலாளர் பேபிசேகர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ, எம்.எம்.அப்துல்லா எம்.பி. ஆகியோர் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனைகளை விளக்கி சிறப்புரை ஆற்றினர். உடன் ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், ஆவடி மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ் மாநில மாணவரணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மண்டல குழு தலைவர் அமுதா பேபி சேகர், பகுதி செயலாளர்கள் ஆவடி ராஜேந்திரன், பொன் விஜயன், ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ், வார்டு செயலாளர் முல்லை வி.ராஜேந்திரன், உள்பட நிர்வாகிகள் உள்ளனர்.